10th September 1960]

Village Officers

*602 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. ANANDAN): கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 14—4—1960-ல் தோட்டி, தலையாரிகள் சம்பளத்தைப்பற்றி ஏதேனும் விண்ணப்பம் கிடைத்ததா?

(ஆ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI: சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் தலையாரி, தோட்டி இவர்களுக்கு இரண்டு மூன்று ரூபாய் அதிகமாகச் சம்பளம் தரப்படும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அது போதுமா? அவர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தைக்கொண்டு அவர்களால் வாழ்க்கை நடத்த முடியுமா? இதை ஏன் சர்க்கார் பரிசீலனை செய்து கொஞ்சம் உயர்த்துவதற்கு முயற்சிக்கக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: விண்ணப்பம் வந்திருக்கிறதா என்றார்கள். இல்லையென்றேன். ஏன் உயர்த்தக்கூடாது என்றுதான் இன்னும் அநேகம் துறைகளில் கேட்டு வருகிறார்கள். அந்தமாதிரி இதுவும் ஒன்று.

SRI K. ANBAZHAGAN: கிராமங்களில் பணியாற்றுகிற தோட்டி, தலையாரி முதலியவர்களைக் கூட கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்கள் புல் டைம் சர்வெண்ட்ஸ் ஆகத்தான் கருதப்படுகிறார்கள்.

SRI P. G. MANICKAM: தோட்டி, தலையாரி முதலியவர்களை முழு நேர ஊழியர்களாகக் கருதி சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்பொழுதே அவர்கள் கௌரவ வேலைக்காரர்களாகவே கருதப்படுகிறார்கள் என்று நினைக்கிறேன். கிராமங்களில் இருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்துத்தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறோம். சமீபத்தில்தான் கொஞ்சம் உயர்த்தியிருக்கிறோம்.

SRI N. R. THIAGARAJAN: இந்தத் தலையாரி முதலானவர்களுக்கு சமீபத்தில் உயர்த்தியிருக்கும் சம்பளம் கூட போதாது என்ற முறையில் இன்னும் சற்று உயர்த்திக்கொடுக்க யோசனை செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சில மாதங்களுக்கு முன்போ சில வருஷங்களுக்கு முன்போதான் கிராம சிப்பந்திகளுடைய சம்பளம் உயர்த்தப்பட்டது. இப்போது பே கமிஷன்

சிபார்சு வந்து அநேகம் பேர்களுக்கு சம்பளம் உயர்த்தப் பட்டிருக்கிறது. இவையெல்லாம் அமுலுக்கு வந்தபிற்பாடு யோசிக்கலாம்.

SRI K. ANBAZHAGAN: கிராம சிப்பந்திகளை முழு நேர ஊழியர்கள் என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். முழு நேர சர்க்கார் ஊழியர் என்றால் குறைந்தபட்சம் 60 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று பே கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: முழு நேர ஊழியர் கள் என்று நான் சொல்வதும் சப்ஜெக்ட்டு கரெக்ஷன் தான். ஞாபகத்தில் இருந்து சொல்கிறேன்.

SRI J. MATHA GOWDER: கிராம ஊழியர்களுக்கு சென்ற சில ஆண்டுகளுக்கு முன் உடுப்பு கொடுக்கப்பட்டது. அப்புறம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. வருடா வருடம் உடுப்புகளையாவது கொடுப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: தனியாகக் கேள்வி கேட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI T. IRUSAPPAN: கிராம கோட்டி, தலையாரி முதலிய வர்கள் கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லப்படு கிறது. முன்காலத்தில் அவர்களுக்கு மானியம் கொடுத்திருந் தார்கள். அதை அனுசரித்து இன்றைக்கு அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க பரிசீலனை செய்தால் நலமாக இருக்காதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது ஒரு பெரிய பிரச்னை. மேலும் பண விஷயம் கலந்திருக்கிறது. கேள்வி மூலமாக இதற்குச் சரியான பதில் கொடுக்க முடியாது.

MR. SPEAKER: கேள்வி 603, 604 ஆகிய இரண்டுக்கும் சேர்த்து பதில் அளிக்கும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Buckingham Canal

*603 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பக்கிங்ஹாம் கால்வாயை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ப்பதற்கு திட்டத்தை மாற்றி (revised estimate) அனுப்பும்படி மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டார் களா?

(ஆ) அப்படியானால் முதலில் போட்ட திட்டச் செலவு எவ்வளவு? மாற்றி அமைக்கப்பட்ட திட்டச் செலவு எவ்வளவு?